# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.8/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பரிமளா | மதம் | : இந்து |
| க/பெ | : சுந்தரமூர்த்தி | ஜாதி | : -- |
| வயது | : 60 | கிராமம் | : பாகசாலை |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**22.09.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

7. கோபால் பிள்ளை எனக்கு என்ன உறவு என்றால் தாய் மாமா ஆவார். கோபால் பிள்ளையின் அப்பா பெயர் கன்னிப்பிள்ளை என்றால் சரிதான். சுப்பிரமணிய பிள்ளை த/பெ நடேச பிள்ளை என்பவர் எனக்கு என்ன உறவு என்றால் தாத்தா ஆவார். கோபால் பிள்ளையும் சுப்பிரமணிய பிள்ளையும் எனக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் சாட்சி கையெழுத்து செய்துள்ளனர் என்றால் சரிதான். கன்னியம்மாள் எனக்கு என்ன உறவு என்றால் பாட்டி ஆவார். 2004ல் கன்னியம்மாளுக்கு என்ன வயதிருக்கும் என்றால் தெரியாது. கன்னியம்மாள் உடல் நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் இல்லை. நன்றாக இருந்தார்.

8. தாந்தோணி பிள்ளை இறந்த பிறகு 1ம் பிரதிவாதியான ராஜகோபால் அந்த சொத்தை ஆண்டு அனுபவித்து வந்தார் என்றால் நான்தான் அனுபவித்து வந்தேன். ராஜகோபாலின் உடன்பிறந்த சகோதரரான என் அப்பா சுப்பிரமணிய பிள்ளை ராஜகோபாலின் அனுபவத்தை கெடுக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் கன்னியம்மாவின் அம்மாவை உடன் அழைத்து சென்று மனம் மாற்றி 29.04.2004ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை என் பெயருக்கு எழுதி வைத்தார்கள் என்றால் தாந்தோணிபிள்ளை சொத்தைதான் என் பாட்டி எனக்கு எழுதி வைத்தார். முனியம்மாள் பெயரில் பட்டா, அடங்கல் உள்ளிட்ட எந்த ஆவணமும் இல்லாமல் என்

பெயரில் எழுதி வைக்கப்பட்ட ஆவணம் அது சட்டப்படி செல்லாத ஆவணம் என்றாலும் சரியல்ல. எனக்கு தேவையான நபர்களை வைத்து சாட்சி கையெழுத்து இட வைத்து ஆவணத்தை உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல.

9. 25.07.2005ல் நானும் மற்ற பிரதிவாதிகளும் சேர்ந்து திலகவதி க/பெ பாபு என்பவருக்கு புல எண்.48/5D, 48/5C, 48/6A, 48/5D ஆகிய சொத்துக்களை பொறுத்து பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் எழுதி கொடுத்தோம் என்றால் நாங்கள் எழுதவில்லை. மேற்படி விவரத்தை பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளதை வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் வழக்கறிஞர் சொல்லியுள்ளார். மேற்படி ஆவணத்தில் நான் கையெழுத்து செய்யவில்லை என மறுப்பு தெரிவித்து நான் ஏதேனும் பதில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. நான் 25.07.2005ம் ஆவணத்தைப் பற்றிய விவரத்தை தெரிவித்தால் உண்மை நீதிமன்றத்திற்கு தெரிந்துவிடும் என்பதற்காக வேண்டுமென்றே உண்மையை மறைத்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10. புல எண்.48/5D, 48/5C, 48/6A, 48/5D ஆகிய சொத்துக்களில் எனக்கு ஏதேனும் பிரச்சனை உள்ளதா என்றால் தெரியவில்லை. புல எண்.48/5D, 48/5C, 48/6A, 48/5D ஆகிய சொத்துக்கள் யார் அனுபவத்தில் உள்ளது என்றால் தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 ஆன தான செட்டில்மெண்ட் ஆவணம்தான் கன்னியம்மாள் எனக்கு எழுதி கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ஆவணத்தில் தாந்தோணி பிள்ளை தான் என்னை தத்தெடுத்தாக சொல்லியுள்ளது என்றால் சரிதான். ஆவணத்தில் உள்ள அடித்தல் திருத்தல்களை பற்றி அந்த ஆவணத்தின் ஒவ்வொரு பக்கத்தில் அடியிலும் எந்த குறிப்புகளும் இல்லை என்றாலும் மேற்படி அடித்தல் திருத்தல்கள் நானே உருவாக்கியவை என்றாலும் நான் திருத்தவில்லை. நான் படிக்காதவள்.

11. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 3 பட்டா என் பெயரில் உள்ளது என்றால் சரிதான். தாந்தோணி பிள்ளையின் வாரிசு சான்று, நடேச பிள்ளையின் வாரிசு சான்று ஆகியவை கொடுத்து வா.சா.ஆ 3 பட்டா மாற்றவில்லை என்றால் தாந்தோணி பிள்ளையின் வாரிசு சான்று உள்ளது. அவ்வாறு எந்த வாரிசு சான்றையும் என் தரப்பில் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். முறையான வாரிசு சான்றிதழ், ஆவணங்கள் எதுவும் இல்லாமல் பெற்ற வா.சா.ஆ 1,

வா.சா.ஆ.3, வா.சா.ஆ7 ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. சுப்பிரமணிய பிள்ளையின் வாரிசு, கிருஷ்டப்ப பிள்ளையின் வாரிசு, பலராம பிள்ளை, ராஜகோபால் பிள்ளை, மல்லிகா ஆகிய அனைவரும் நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் கூட்டு பாகஸ்தர்கள் என்றாலும் நான் அவர்களை இந்த வழக்கில் சேர்க்காததால் அவசிய தரப்பினர்களை சேர்க்காததால் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள்தான் வழக்கு சொத்தில் அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல. 20.01.2021ல் பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

12. சொத்து என்னுடையது என்று விளம்புகை பரிகாரம் கேட்காததால் என் வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. உண்மை நிலமையை மறைத்து போலியான ஆவணங்கள் மூலம் வழக்கை திசைத்திருப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் எனது அனுபவத்தையோ, உரிமையையோ நிரூபிக்கும் ஆவணங்கள் இல்லை என்றாலும் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)